# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 07/மா/2025

நாள் 01.04.2026

M.A. முஹம்மத் ரபீக் (ம) ஹாஜிராபானு
மதுரை --- முறையீட்டு மனுதாரர்கள்

உதவி ஆணையாளர்,
மண்டலம் 2 (வடக்கு)
மதுரை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

மதுரை–20, 80 அடி பிரதான சாலை, அண்ணாசாலை, கதவு எண்.P-652, P-652-A. என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.A.முஹம்மத் ரபீக் மற்றும் திருமதி S.ஹாஜிராபானு என்பவர்களின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 08.08.2024 அன்று பெறப்பட்டு 07/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரர்களின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை–20, 80 அடி பிரதான சாலை, அண்ணாசாலை, கதவு எண்.P-652, P-652-A. என்கிற முகவரியில் வசிக்கும் திரு. M.A.முஹம்மத் ரபீக் மற்றும் திருமதி S.ஹாஜிராபானு என்பவர்களின் நாளிடப்படாத மனுவில் இணைத்துள்ள மதுரை மாநகராட்சி ஆணையாளரை எதிர்மனுதாரராக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ள 14.06.2024 நாளிட்ட பிரமாண வாக்குமூலத்தில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

“நாங்கள் மதுரை மாநகர், கே.கே.நகர், பிளாட் எண் 570–ல் வசித்து வருகிறோம்.

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு எண் 33, அண்ணாசாலை 80 அடி ரோடு பிளாட் எண் 652 வரிவிதிப்பு எண் 115/033/901503 கட்டிடம் M.A. முஹம்மத்ரபீக் பெயரிலிருந்து S. ஹாஜிராபானு பெயருக்கு உத்தரவு எண் பெ.ம.மஎண்AS85/3367/Z3 நாள் 12.09.2023ன் பிரகாரம் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பிளாட் எண் 652–A M.A.முஹம்மத்ரபீக் பெயரில் இருந்து வருகிறது. மேற்படி 2 கட்டிடங்களையும் ஒன்றாக இணைத்து வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 01.0.4.2016 முதல் அரைவருட வரியாக ரூ.2,99,986/– என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி வரிவிதிப்பில் M.A.முஹம்மத்ரபீக் மற்றும் S. ஹாஜிராபானு, ஆகிய இருவர் பெயரில் வரிவிதிப்பு செய்வதற்கு பதிலாக M.A.முஹம்மத்ரபீக் என்று தவறுதலாக ஒருவர் பெயரில் மட்டும் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, பிளாட் எண் 652க்குண்டான வரிவிதிப்பு எண் 115/033/901503 ரத்து செய்தும், பிளாட் எண் 652–A

வரிவிதிப்பு எண் 115/033/901504 கட்டிடத்திற்கு தற்போது புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் வரிவிதிப்பின் அடிப்படையில் M.A.முஹம்மத்ரபீக் மற்றும் S. ஹாஜிராபானு, ஆகிய இருவர் பெயருக்கும் வரியை திருத்தி உத்தரவு பிறப்பிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும், 1.4.2016 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. 01.04.2016ல் அரைவருட வரியாக ரூ.149993/– என்றும் 1.4.2022 பொதுச்சீராய்வு மூலம் ரூ2,99,986/– என்றும் வரி நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 01.04.2016முதல் அரைவருட வரியாக ரூ2,99,986/–என தவறுதலாக விதிப்பட்டுள்ளதை ரத்து செய்து 01.04.2016 முதல் அரைவருட வரியாக ரூ.1,,49,993/– என்றும் 1.4.2022 பொதுச்சீராய்வில் 100% உயர்வு செய்து 01.04.2016முதல் அரைவருட வரியாக .ரூ2,99,986/– என வரியை திருத்தி விதித்தும், திருத்திய கேட்பு அறிவிப்பு அனுப்பி வைக்கும்படி கோரி கடந்த 17.04.2024ல் பதிவுத்தபாலில் மனு சமர்ப்பித்தோம்.

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, உதவி ஆணையாளர் அவர்கள் எங்களை நேரில் அழைத்து, எங்கள் மனுவின் மீது விசாரணை நடத்தி மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் 01.04.2014 முதல் ரூ. 149993/– என்றும் 01.04.2022 பொதுச்சீராய்வில் 100% உயர்வு செய்து அரைவருட வரியாக ரூ.299986/–. என திருத்தம் செய்து அறிவிப்பு அனுப்பி வைப்பதாக கூறினார்கள். ஆனால், உதவி ஆணையாளர் அவர்கள் எங்களிடம் கூறியதற்கு எதிர்மறையாக 17.05.2024ம் தேதியிட்ட கேட்பு அறிவிப்பில் ஏற்கனவே, தவறுதலாக விதிக்கப்பட்ட வரியை 1 வாரத்திற்குள் செலுத்தும்படி அறிவிப்பு சார்வு செய்திருக்கிறார்கள். ஆகவே, எங்கள் மனுவை கருணையுடன் பரிசீலனை செய்து 01.04.2016 முதல் அரைவருட வரியாக ரூ. 149993/– என்றும் 01.04.2022 பொதுச் சீராய்வில் 100%உயர்வு செய்து அரைவருட வரியாக ரூ. 299986/– என்றும் வரியை திருத்தி விதிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் பணிவுடன் பிரார்த்திக்கிறோம்.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 13.01.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையாளரிடம் அறிக்கை கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.02.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில் மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையாளர் தனது 12.02.2026 நாளிட்ட கடித எண் ம2/ஆ4/001597/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி, மண்டலம்–2 (வடக்கு), வார்டு 33, கதவு எண் 652, 652ஏ, அண்ணாசாலை 80 அடி ரோடு என்ற முகவரியிலுள்ள மனுதாரரின் கட்டிடத்திற்கு கூடுதலாக வரிவிதிப்பு ஏற்படுத்தப்பட்டதை சரி செய்து தரக் கோரியும், பெயர் திருத்தம் செய்து தரக் கோரியும் 24.07.2023 நாளிட்டு வரப்பெற்ற மனு பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ளதன் அடிப்படையில் கட்டிடம் நேராய்வு செய்து கட்டிட அளவுகள் சரி பார்க்கப்பட்டு வரி விதிப்பு எண்.115/033/901504–ல் 01.04.2016 முதல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது.

இந்நேர்வில் மேற்படி வணிக அடிப்படையிலான கட்டிடத்திற்கு 01.04.2016 முதல் 31.03.2022 வரை அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.1,49,993/– ஆகவும், 01.04.2022 முதல் அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.2,99,986/– ஆகவும் சொத்துவரி விதிக்கப்பட்டது. ஆனால் கணினியில் மாறுதலாக 01.04.2016 முதல் அரையாண்டு சொத்து வரித் தொகை ரூ.2,99,986/– என பதிவாகி விட்டது.

மேற்கூறியவாறு வரி விதிப்பு எண்.115/033/901504–ல் மாறுதலாக உள்ள கேட்புத் தொகையை சரி செய்யக் கோரி, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் 26.07.2024–ல் தகவல் தெரிவிக்கப்பட்டு உரிய திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. மேலும் மனுதாரரின் வரி விதிப்பு எண்ணிற்கு பெயர் திருத்தமும் மேற்கொள்ளப்பட்டு தற்போது திருவாளர்கள் M.A.முஹம்மத் ரபிக் மற்றும் S.ஹாஜிராபானு இருவர் பெயரிலும் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்ற விபரம் 21.02.2025 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் கடித நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி சொத்து வரி விதிப்பின்படி நடப்பாண்டு வரை சொத்துவரி நிலுவைத்தொகை இல்லாமல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. அதன் நகல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது என்ற விபரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

5. மனுதாரர் 17.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகவில்லை.

6. எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி, மண்டலம் 2 (வடக்கு)–ன் உதவி ஆணையர் சார்பாக உதவி வருவாய் அலுவலர் 17.02.2026 அன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''மனுதாரரின் கட்டிடம் நேராய்வு செய்து கட்டிட அளவுகள் சரி பார்க்கப்பட்டு வரி விதிப்பு எண்.115/033/901504–ல் 01.04.2016 முதல் சொத்து வரி நிர்ணயம் செய்யப்பட்டது.

வணிக அடிப்படையில் கட்டிடத்திற்கு 01.04.2016 முதல் 31.03.2022 வரை அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.1,49,993/– ஆகவும், 01.04.2022 முதல் அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.2,99,986/– ஆகவும் விதிக்கப்பட்டது. ஆனால் கணினியில் மாறுதலாக 01.04.2016 முதல் அரையாண்டு சொத்து வரித் தொகை ரூ.2,99,986/– என பதிவாகி விட்டது.

எனவே, மேற்கண்ட வரி விதிப்பு எண்.115/033/901504–ல் மாறுதலாக உள்ள கேட்புத் தொகையை சரி செய்யக் கோரி, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் 26.07.2024ல் தகவல் தெரிவிக்கப்பட்டு சொத்துவரி சரி செய்தும், மனுதாரரின் வரி விதிப்பு எண்ணிற்கு பெயர் திருத்தம் செய்யப்பட்டு, தற்போது திருவாளர்கள் M.A.முஹம்மத் ரபீக் மற்றும் S.ஹாஜிராபானு இருவர் பெயரிலும் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்கிற விவரம் 21.02.2025 நாளிட்ட கடிதம் மூலம் மனுதாரருக்கு விவரம் தெரிவிக்கப்பட்டது. சொத்து வரி விதிப்பின்படி நடப்பாண்டு வரை சொத்துவரி நிலுவைத்தொகை இல்லாமல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. மனுதாரர் 17.02.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கு ஆஜராகாததால், மேற்கண்ட மனு தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 17.03.2026 அன்று நடைபெறும் மறுவிசாரணைக்கு ஆஜராகுமாறு 25.02.2026 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. இதனை எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2–ன் உதவி ஆணையருக்கு நகலிடப்பட்டது.

8. ஆனால் மனுதாரர் 17.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணைக்கும் ஆஜராகவில்லை. எனினும், மனுதாரர் தன்னுடைய 03.03.2026 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட தெரிவித்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சி, மண்டலம் 2, வார்டு எண் 33, அண்ணா சாலை, 80 அடி ரோடு, கதவு எண் P.652A வரிவிதிப்பு எண் 115/033/901504 கட்டிடத்திற்கு 01.04.2016 முதல் அரை

வருட வரியாக ரூ.2,99,986/– என விதிக்கப்பட்டதை ஆட்சேபித்து 17.04.2024–ல் ஆணையாளர் அவர்களுக்கு மனு செய்து கொண்டோம். மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்காததால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 14.06.2024–ல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த நிலையில், மாநகராட்சி ஆணையாளர் அவர்களிடம் சமர்ப்பித்த மனுவின் அடிப்படையில் அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து ரூ.2,99,986/–லிருந்து ரூ.1,49,993/– என வரி திருத்தி விதிக்கப்பட்டு வரி நிலுவை இல்லாமல் வரி செலுத்தப்பட்டு விட்டது.

இந்த நிலையில். தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் செயலாளர் அவர்களால் அனுப்பப்பட்ட அழைப்பாணை எண் 07/மா/2025 நாள் 25.02.2026 பிரகாரம் 17.03.2026–ந்தேதி நேரில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

வரிதிருத்தி விதிக்கப்பட்டு வரி முழுவதும் நிலுவையில்லாமல் செலுத்தப்பட்டு விட்டதாலும் ரம்ஜான் நோன்பு இருப்பதால் வர இயலாத நிலையில் இருப்பதாலும் என் மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து மனுவை முடித்து வைக்க பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.''

9. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, கடிதம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் எண் 2, வார்டு எண் 33, அண்ணாசாலை 80 அடி ரோடு பிளாட் எண் 652 வரிவிதிப்பு எண் 115/033/901503 கட்டிடம் M.A.முஹம்மத்ரபீக் பெயரிலிருந்து S. ஹாஜிராபானு பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதும், பிளாட் எண் 652–A M.A.முஹம்மத்ரபீக் பெயரில் உள்ளது என்பதும், மேற்படி 2 கட்டிடங்களையும் ஒன்றாக இணைத்து வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்ட கட்டிடத்திற்கு 1.4.2016 முதல் அரைவருட வரியாக ரூ.2,99,986/– என வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி வரிவிதிப்பில் M.A.முஹம்மதுரபீக் மற்றும் S. ஹாஜிராபானு ஆகிய இருவர் பெயரில் வரிவிதிப்பு செய்வதற்கு பதிலாக M.A.முஹம்மதுரபீக் என்று தவறுதலாக ஒருவர் பெயரில் மட்டும் வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், ஆகவே, பிளாட் எண் 652க்குண்டான வரிவிதிப்பு எண் 115/033/901503 ரத்து செய்தும், பிளாட் எண் 652–A–க்கு வரிவிதிப்பு எண் 115/033/901504 கட்டிடத்திற்கு தற்போது புதிதாக விதிக்கப்பட்டிருக்கும் வரிவிதிப்பின் அடிப்படையில் M.A.முஹம்மதுரபீக் மற்றும் S. ஹாஜிராபானு ஆகிய இருவர் பெயருக்கும் வரியை திருத்தி உத்தரவு பிறப்பிக்கும்படியும், மேலும், 01.04.2016 முதல் வரிவிதிப்பு செய்யப்பட்டதில், 01.04.2016ல் அரைவருட வரியாக ரூ.149993/– என்றும் 01.04.2022 பொதுச்சீராய்வு மூலம் ரூ2,99,986/– என்றும் வரி நிர்ணயிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதும், ஆனால், 01.04.2016 முதல் அரைவருட வரியாக ரூ2,99,986/–என தவறுதலாக விதிப்பட்டுள்ளதை ரத்து செய்து 01.04.2016 முதல் அரைவருட வரியாக ரூ.149993/– என்றும், 01.04.2022 பொதுச்சீராய்வில் 100% உயர்வு செய்து 01.04.2022 முதல் அரைவருட வரியாக .ரூ2,99,986/– என வரியை திருத்தி விதிக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாய் கோரப்பட்டு, அக்கோரிக்கை ஏற்கப்பட்டது என்பது மனுதாரரின் மனுக்களிலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரரின் கட்டிடம் நேராய்வு செய்து கட்டிட அளவுகள் சரி பார்க்கப்பட்டு வரி விதிப்பு எண்.115/033/901504–ல் வணிக அடிப்படையில் கட்டிடத்திற்கு 01.04.2016 முதல் 31.03.2022 வரை அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.1,49,993/– ஆகவும், 01.04.2022 முதல் அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.2,99,986/– ஆகவும் சொத்துவரி விதிக்கப்பட்டது என்பதும், ஆனால் கணினியில் மாறுதலாக 01.04.2016 முதல் அரையாண்டு சொத்து வரித் தொகை ரூ.2,99,986/– என பதிவாகி விட்டதால், மேற்கண்ட

வரி விதிப்பு எண்.115/033/901504–ல் மாறுதலாக உள்ள கேட்புத் தொகையை சரி செய்யக் கோரி, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட்டு, தவறாக பதிவு செய்யப்பட்ட சொத்துவரித் தொகையினை சரி செய்தும், மனுதாரரின் வரி விதிப்பு எண்ணிற்கு பெயர் திருத்தம் செய்யப்பட்டு, தற்போது திருவாளர்கள் M.A.முஹம்மது ரபீக் மற்றும் S.ஹாஜிராபானு இருவர் பெயரிலும் சொத்து வரி விதிக்கப்பட்டுள்ளது என்பதும், சொத்து வரி விதிப்பின்படி நடப்பாண்டு வரை சொத்துவரி நிலுவைத்தொகை இல்லாமல் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது என்பதும் இதன் மூலம் மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது என்பதும் எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) உதவி ஆணையாளரின் அறிக்கை மற்றும் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரரின் கோரிக்கை ஏற்கப்பட்டு மனுதாரரின் கட்டிடத்திற்கு 01.04.2016 முதல் 31.03.2022 வரை அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.1,49,993/– ஆகவும், 01.04.2022 முதல் அரையாண்டு சொத்து வரி தொகை ரூ.2,99,986/– ஆகவும் சொத்துவரி விதிக்கப்பட்டுள்ளதை மனுதாரரும் தன்னுடைய கடிதத்தில் ஏற்றுக் கொண்டுள்ளதால், மனுதாரரின்மனு மீது மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. M.A.முஹம்மத் ரபீக் (ம)
திருமதி S.ஹாஜிராபானு,
கதவு எண்.P-652, P-652-A,
80 அடி பிரதான சாலை,அண்ணாசாலை,
மதுரை–625 020.

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி, தல்லாகுளம், மதுரை–625 002.

(3) உதவி ஆணையர்,
மண்டலம் 2 (வடக்கு), மதுரை மாநகராட்சி,
ரேஸ் கோர்ஸ் சாலை, மதுரை–625 002.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி.

ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

8/4/26
செயலாளர்.

8/4/26 8/10

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032 தமிழ்நாடு அரசு வாய்மையே வெல்லும்